DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.208 /2016**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெரோம் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**03.05.2023**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. 17.07.2014-ம் தேதி CC.16/2014 வழக்கிற்கு நான் நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்காக வராமல் இருந்ததற்காக எனது தரப்பில் 317 மனு தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதில் அதன் Crmp no தெரியுமா என்றால் தெரியாது வழக்கறிஞரிடம் சொன்னேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த புகார் மனுவில் அந்த crmp no ஐ சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை. எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 12.01.2016-ம் தேதி அனுப்பினேன். அந்த அறிவிப்பில் CC.16/2014 வழக்கில் தாக்கல் செய்த 317 மனுவின் crmp no சொல்லியுள்ளேனா என்றால் அந்த நம்பரை குறிப்பிடவில்லை ஆனால் அது பற்றி சொல்லியுள்ளேன்.

2. அந்த வழக்கறிஞர் அறிவிப்பிலும், நான் தாக்கல் செய்துள்ள புகாரிலும் 17.07.2014-ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட 317 மனுவின் Crmp no.914/2014 என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. CC.165/2014 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்படும் 317 மனுவின் Crmp no.914/2014 எந்த ஒரு மனுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்படும் 317 மனுவின் Crmp no.914/2014 இல்லை என்றால் தெரியாது. 17.07.2014-ம் தேதி எனக்காக வழக்கறிஞர் மூலம் CC.165/2014

வழக்கில் தாக்கல் செய்த 317 மனு என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அதில் Crmp.no.911/2014 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. CC.no.165/2014 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட 317 மனுவின் Crmp.no.914/2014 எனக்காக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தெரியாது crmp.no.911/2014 தான் நான் தாக்கல் செய்த மனு. crmp. no.914/2014 மனுவானது வேறு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது CC.no.165/2014 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது கிடையாது என்றால் தெரியாது வேறு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனு. 17.07.2014-ம் தேதி எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2 வது ஆவணத்தின் படி Ecourts status ல் A1 to A4 present என்று காண்பிக்கப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் தான் எதிர்மனுதாரர் நான் ஒரே நேரத்தில் பள்ளியிலும், நீதிமன்றத்திலும் இருந்ததாக தகவல் உரிமை சட்டத்தின் கீழ் மனு அளித்துள்ளார் என்றால் சரியல்ல நீதிமன்றத்திற்கு வரவில்லை பள்ளியில் தான் முழுநேரமும் இருந்தேன். தகவல் அறியும் உரிமை சட்ம் பிரிவு 21 ன்படி எந்த ஒரு நபருக்கு எதிராகவும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தகவல் கேட்டு மனு செய்வது குற்றமாகாது, அது அவதூரும் ஆகாது எந்த ஒரு குற்ற வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது என்றால் அவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் தகவல் பெற்றுக்கொண்டு எங்கள் பள்ளி உயர் அதிகாரிகளுக்கு என் மீது குற்றம் சாட்டி கடிதம் அனுப்பியுள்ளார்.

4. எனது புகாரில் எதிர்மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தொடக்க கல்வி அலுவலர், கல்வி இயக்குனர் ஆகியோருக்கு எத்தனை முறை மனு அனுப்பியுள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அனுப்பவில்லை என் மீது குற்றம்சாட்டி தான் அனுப்பியுள்ளார்.புகாரில் ஒவ்வொரு அலுவலகத்தில் இருந்தும் விளக்கம் கேட்டு வந்ததாக சொல்லியுள்ளதில் எத்தனை முனை விளக்கம் கேட்டு வந்தது என்றால் எழுத்து மூலமாக 1 முறை விளக்கம் கேட்டு வந்தது, வாய்மொழியாக ஒரு முறை கேட்டார்கள். புகாரில் எனக்கு மேல் அதிகாரியிடமிருந்து பல முறை விளக்கம் கேட்டு அறிவிப்பு வந்தது என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல.

5. ஏற்கனவே CC.165/2014 வழக்கில் நான் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால் பிடிகட்டணை ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டுள்ளது. எத்தனை முறை என்றால் 2 முறை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு பிடிகட்டளை பிறப்பிக்கும் போது பள்ளியிலோ அல்லது விடுப்பிலோ இருந்தேனா என்றால் வேலையில் இருந்தேன். இந்த வழக்கில் நான் கடந்த 19.01.2023-ம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகிருந்தேனா என்றால் தெரியவில்லை. 2023 ம் வருடம் ஜனவரி மாதத்தில் பள்ளிக்கு எத்தனை நாள் விடுமுறை எடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. 19.01.2023-ம் தேதி நான் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று மனு தாக்கல் செய்துள்ளது ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. அன்றைய தேதியில் நான் பள்ளியில் வேலை பார்த்தேனா, விடுப்பில் இருந்தேனா, வெளியில் சென்றிருந்தேனா

என்றால் ஞாபகம் இல்லை. 27.01.2023-ம் தேதி நான் பள்ளியில் வேலை பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

6. நான் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் என்னிடம் ராமசந்திரன் என்பவரோ, ஜலீலா என்பவரோ நேரில் என்னிடம் கேட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் எதிர்மனுதாரர் எந்த தேதியில்  எனது உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள புகார் மனுவிலும் எந்த தேதியிட்டு புகார் அனுப்பினார் என்று சொல்லவில்லை என்றல் சரிதான். எதிர்மனுதாரர் அனுப்பிய புகார் மனுவையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அப்போது அந்த மனுவை உயர் அதிகாரிகளிடமிருந்து பெறவில்லை அதனால் தேதி குறிப்பிடவில்லை.

7. நான் புகாரில் இராமசந்திரன் என்பவர் என்னிடம் நேரில் கேட்டதால் மனஉளைச்சல் ஏற்பட்டதாகவும், அவர் நேரில் வந்து என்னிடம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.ஜலீலா என்பவர் எனக்கு குடும்பரீதியாக நல்ல பழக்கம் என்றால் சரியல்ல ஆசிரியராக எனக்கு தெரியும். ஏற்கனவே நீதிமன்றத்தில் நான் அளித்த சாட்சியத்தில் ஜலீலா என்பவர் குடும்பார்த்தமாக நெருங்கிய பழக்கம் உள்ளவர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் இராமேஸ்வரம் புதுரோடு பள்ளியில் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை பணியில் இருந்தேன் என்றால் 2013  ஜீன் முதல் தற்போது வரை அங்கு தான் பணிபுரிந்து வருகிறேன். அதற்கு இடையில் நான் வேறு எந்த பள்ளியிலும் வேலை பார்க்கவில்லை என்றால்  வேலை பார்த்திருக்கிறேன் Deputation ல் பார்த்தேன்.. Deputation ல்  எந்த பள்ளியில், எந்த வருடத்தில் வேலை பார்த்தேன் என்றால் தனுஷ்கோடியில் மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 2015 ம் வருடம் ஆகும். மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சின்னபாலம், அதே 2015 ம் வருடம் ஆகும். பின்னர் 2019 ல் அரசு மேல்நிலைப்பள்ளி சாத்தாங்குளம் ஆகும்.இராமேஸ்வரம் ரோடு உயர்நிலைப்பள்ளியில்  2015 ல் பணிபுரிந்து வரும் போது அங்கு PTA கொடுத்த  புகாரின் அடிப்படையில் தான் எனக்கு தனுஷ்கோடி ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கு பணிமாறுதல் கொடுத்தார்கள் என்றால் இல்லை. தொடக்க கல்வி அலுவலகர் கொடுத்த பணிமாறுதல் உத்தரவில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை.

8. எதிர்மனுதாரர் 17.07.2014-ம் தேதி நீதிமன்றத்தில் Ecourt status ல் இருந்த diary ன் அடிப்படையில் தான் என் மீது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் புகார் மனு அனுப்பினார் என்றால் இல்லை. நல்லெண்ணத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட  ஆவணங்களின் அடிப்படையில் தான் எதிர்மனுதாரர் புகார் மனு அனுப்பினார் என்றால் சரியல்ல. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 499 விளக்கத்தில் விதிவிலக்கு 4 ல் நீதிமன்ற நடவடிக்கைகளை பற்றி அல்லது நடவடிக்கை முடிவை பற்றி உள்ளதை உள்ளபடி வெளியிடுவது அவதூறு ஆகாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு நபர் அரசு ஊழியர் மீதோ, அவரது உயர் அதிகாரி மீதோ சட்டப்படியான அதிகாரம் செலுத்தக்கூடிய

நபரிடமோ மனு கொடுத்தது அவதூறு ஆகாது என இதச பிரிவு 499 விளக்கத்தில் விதிவிலக்கு 5,8 ல் உள்ளது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் என் மீது குற்றம் சாட்டினார் என்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது உயர் அதிகாரியின் உத்தரவை எதுவும் மதிக்ககூடிய நபர் இல்லை என்றால் சரியல்ல. நான் பணிபுரியும் பள்ளியில் மாணவர்கள் மற்றம் மாணவிகளிடம் ஒழுங்கற்றதாக நடந்து கொண்டதாக PTA சங்கத்தில் இருந்து என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. PTA சங்கத்தில் இருந்து கொடுக்கப்பட்ட புகார் மனுவில் நான் headset காதில் வைத்துக்கொண்டு, மாணவர்களுக்கு பாடம் நடத்தாமல் இருந்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. நான் பணியை முறையாக செய்யாமல், ஒழுங்கீனமாக நடந்து கொண்டு, நல்லாசிரியர் என்று காணிபித்துக்கொண்டு நான் எதிர்மனுதாரர் மீது அவதூறு அறிவிப்பு அனுப்பியது தவறு என்றால் சரியல்ல. நான் இந்த அவதூறு வழக்கை தாக்கல் செய்ய தகுதியான நபர் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ எதிர்மனுதாரர் செயலால் மனஉளைச்சல் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் ஆசிரியர் பணியை புனிதமாக நினைத்து பணியாற்றும் ஆசிரியர் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பில் சொன்னது போல் எதிர்மனுதாரர் எனக்கு ஏற்பட்ட இலப்பிற்கு எந்த நஷ்டமும் கொடுக்க கடைமைப்பற்றவர் அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது அனாவசியமாக வழக்கு தாக்கல் செய்ததால் நான் தான் அவருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும், எனக்கும் எந்தவித முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான்.

10. பிரான்சிஸ் மேரி நீதிமன்றத்தில் அளித்த முதல் விசாரணை சாட்சியத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி மனுதாரர் பற்றி தகவல் கேட்டிருந்தார் என்று சொல்லியிருந்தார் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வழக்கு தாக்கல் செய்த பின்னர் அனுப்பியிருந்தார். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் E court status ல் உள்ள படி தான் நான் தகவல் அறியும் சட்டத்தின் படி மனு அனுப்பினேன் அது தகவல் உரிமை சட்டத்தின் படி குற்றமாகது என்று பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அதனால் எதிர்மனுதாரர் எந்த வித இழப்பீடும் கொடுக்க கடைமைப்பட்டவர் அல்ல என்று சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.